
# இயல் 6.6 - தகவல் செயலாக்கம்

பயிற்சி எண் :: 6.6.1.1.B


முறையாகப் பட்டியலிடுதல்

## தகவல் செயலாக்கம் - முறையாகப் பட்டியலிடுதல் - உதாரணத்துடன் விளக்கம்

உன்னிடம் 2 சிகப்பு நிறப்பந்துகள் அடங்கிய பெட்டியும் 3 நீல நிறாப்பந்துகள் அடங்கிய பெட்டியும் உள்ளன. ஒரு முறையில் ஒவ்வொரு பெட்டியிலிருந்தும் ஒவ்வொரு பந்து வீதம் எடுப்போமேயானால் எத்தனை முறை அவ்வாறு பந்துகளை எடுக்க இயலும். சிகப்பு நிறப்பந்துகளை $P$ மற்றும் $Q$ என பெயரிட்டுக்கொள்ளலாம். நீல நிறப்பந்துகளை $x,y$ மற்றும் $z$ என பெயரிட்டுக்கொள்ளலாம். இரு பந்துகளை எடுக்கும் செயலை ஒரு முறையான பட்டியலிட்டு விளக்க முயற்சிப்போம்.




2 சிகப்பு நிறப் பந்துகள் அடங்கிய பெட்டி




3 நீல நிறப் பந்துகள் அடங்கிய பெட்டி

## முறையாகப்பட்டியலிடுதல்

| | | சிகப்பு நிறப் பந்துகள் | |
|---|---|---|---|
| நீல நிறப் பந்துகள் | | $P$ | $Q$ |
| | $x$ | $P$ $x$ | $Q$ $x$ |
| | $y$ | $P$ $y$ | $Q$ $y$ |
| | $z$ | $P$ $z$ | $Q$ $z$ |

**சிறப்பு அம்சங்கள்**

1. இவ்வாறு செய்யும் பொழுது எந்த ஒரு சேர்க்கையையும் விடுபட்டுப் போவதற்கு வாய்ப்பில்லை.
2. நம்முடைய காட்சிப் படுத்துதல் மிக நேர்த்தியாக அமைகிறது.
3. உன்னுடைய சக மாணாக்கருக்கு இம்முறையை விளக்கிச்சொல்லுதல் மிக எளிது.
4. அவர்கள் இதை புரிந்துகொள்வதும் மிக எளிது.

---

ஒரு முறையில் ஒவ்வொரு பெட்டியிலிருந்தும் ஒவ்வொரு பந்து வீதம் எடுப்போமேயானால் 6 முறைகள் பந்துகளை எடுக்க இயலும்.


Sum & solution prepared on Wednesday 15th September, 2021 :: 09:47 Hrs.
All rights related to content above such as problem creation, solution, voice over, Video creation are reserved to
V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, CBE - 641 046, INDIA. Regd :: 4/16/2020 dt. January 31, 2020.